புதுச்சேரி அரசு
போக்குவரத்துத் துறை
***

எண்: 2337/PY/TD/TP-1/2020 புதுச்சேரி, தேதி: 04.10.2021

செய்திக் குறிப்பு

புதுச்சேரியில் BH வரிசையில் வாகன எண்களை பதிவு செய்யும் முறை அறிமுகம்

அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் தங்களுடைய வாகனங்களை செந்த மாநிலத்தில் இருந்து மற்ற மாநிலத்தில் மாற்று வாகன எண் பதிவின் போது ஏற்படும் சிரமங்களை தவிர்க்கும் பொருட்டு, மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சகம் கடந்த 15-09-2021 முதல், பொது போக்குவரத்திற்கு பயன்படுத்தாத (Non-Transport–White Board) வாகனங்களுக்கு BH series-யில் வாகன எண்களை பதிவு செய்துகொள்ளும் வசதியினை அறிமுகப்படுத்தி உள்ளது.

இதன் மூலம் மத்திய அரசு/ மாநில அரசு/ பொதுத்துறை நிறுவனங்கள்/ பொதுத்துறை வங்கிகள்/அரசு தன்னாட்சி அமைப்புகள் அல்லது நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை (நிறுவனங்கள் (அ) கிளைகள்)/ பிராந்திய அலுவலகங்கள்/வணிக அமைப்புகள்/அலுவலகங்களில் நான்கு அல்லது அதற்குமேற்பட்ட வேவ்வேறு மாநில அரசு/ யூனியன் பிரதேசத்தில் பணிபுரியும் ஊழியர்கள் BH series-யில் வாகன எண்களை பதிவு செய்யும் வசதியினை பயண்படுத்திக்கொள்ள முடியும். மேலும், பொது போக்குவரத்திற்கு பயன்படுத்தாத (Non-Transport – White Board) வாகனங்களுக்கு BH series-யில் வாகன எண்களை பதிவு செய்து கொள்ளும் முறை முற்றிலும் வாகன உரிமையாளர்களின் சுய விருப்பத்தின் அடிப்படையில், அதற்குரிய படிவம் பெறப்பட்ட பிறகே செய்து தரப்படும். மேலும், இந்த வாகன பதிவின் படி பொது போக்குவரத்து அல்லாத (Non-Transport – White Board) வாகனங்களுக்கு உரிமையாளர்கள் இரண்டாண்டுக்கு ஒரு முறை சாலை வரி செலுத்த வேண்டும். பதினான்கு ஆண்டுகளுக்கு பிறகு வருடந்தோறும் சாலை வரி செலுத்த வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு https://transport.py.gov.in என்ற இணையதள முகவரியை பார்த்து தெரிந்து கொள்ளலாம். இந்த வாகன பதிவு செதியை மத்திய அரசு/மாநில அரசு/மத்திய மற்றும் மாநில பொதுத்துறை/தன்னாட்சி நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும், நான்கு மற்றும் அதற்கு மேற்பட்ட மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் கிளைகள், மண்டல அலுவலகங்கள் மற்றும் தொழில் அபிவிருத்தி பிரிவுகள் உள்ள தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் நபர்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

5/10/2024

(Dr.A.S. சிவக்குமார்)
போக்குவரத்து ஆணையர்